1990 மார்ச் 22]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இந்தப் பாலம் மிக அத்தியாவசியமான ஒன்று என்பதை மறுப்பதற்கு இல்லை. எனவேதான் இந்தப் பாலத்தை மீண்டும் புதுப்பிக்கவேண்டுமென்று முதலில் நினைத்தோம். ஆனால் புதுப்பிப்பதை விட அதைப் புதிதாக கட்டுவது சிறந்தது என்று ஹைவேஸ்ஸில் இருக்கிற ரிசர்ச் இன்ஸ்ட்டிடியூட்டின் ரிப்போர்ட் எங்களுக்குத் தெரிவித்தது. அதன் அடிப்படையில் 100 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளம்பாக்கத்திலிருந்து கோவளத்திற்கும், கோவளத்திலிருந்து கேளம்பாக்கத்திற்கும் வரவேண்டுமானால் தற்போது 22 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு நான் தமிழில்தான் பதில் சொன்னேன்.

வெள்ளக் கால்வாய் ஆழப்படுத்தலும், தடுப்பு அணை கட்டுதலும்.

***3167 திரு. ஏ. கோதண்டம் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய குணக்கரம்பாக்கம் ஊராட்சியில் உள்ள எட்டிக்குட்டிமேடு கிராமத்தில் உள்ள வெள்ளக் கால்வாய்க்கு தடுப்பு அணை கட்டவும், கால்வாயை ஆழப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தீவிர ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியக் கூறு இருக்குமேயானால், பணி மேற்கொள்ளப்படும்.

[1990 மார்ச் 22

திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய குணக்கரம்பாக்கம் ஊராட்சியில் உள்ள எட்டிக்குட்டி மேடு கிராமத்தில் உள்ள வெள்ளக் கால்வாய்க்குத் தடுப்பு அணை கட்டவும் கால்வாயை ஆழப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரு திட்டங்களை நிறைவேற்று வதற்காக அரசு ஒரு ஆய்வு அறிக்கையைத் தயார் செய்து இருக்கிறது. குணக்கரம்பாக்கத்திற்கு ரூ. 8.75 லட்சத்திலும், எட்டுக்குட்டிமேட்டுக்கு ரூ. 9.12 லட்சத்திலும் ஒரு திட்டம் தயாரித்து அவை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அது அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. ஆய்வு முடிந்த பிறகு, அரசு இதைக் கட்டுவது குறித்து பரிசீலிக்கும்.

சத்துணவு பொறுப்பாளர் நியமனக் குழு

*3561 திரு. அ. மாரிமுத்து :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

சத்துணவு பொறுப்பாளர் நியமனக் குழுவில் ஒன்றிய, ஊராட்சித் தலைவர்களோடு சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெற அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சத்துணவுப் பொறுப்பாளர் நியமனக் குழுவில், அலுவல் சார்பற்ற யாரையும் நியமிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களை, ஒன்றியத்தின் பெருந்தலை வர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் திடீரென்று சோதனை செய்து நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.